முருகப்பெருமான் துணை

**மகான் குலச்சிறை நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.02.2023**, திங்கட்கிழமை

1. நலம் தரும் ஞான பலம் தரும்
   ஞானியே ஆறுமுக அரங்கனே
   வளம்தரும் வாழ்வில் வரம்தரும்
   வள்ளலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   ஆசிதனை சுபகிருது சால் திங்கள்
   அட்டம திகதியதும் சோமவாரம்
   **(சுபகிருது வருடம் மாசி மாதம் 08 ம் நாள், 20.02.2023 திங்கட்கிழமை)**
3. வாரமதில் குலச்சிறை நாயனாரும்
   வழங்குவேன் சன்மார்க்கக் குலம்
   சோரமிலா வளர்ந்து ஓங்கிட
   செப்பிடுவேன் உலகோர் நலம் பெற
4. நலம்தரும் ஞானிகள் பலம்
   ஞானமாக மக்கள் பெற்றிட
   சலனமற ஞானிகள் பூசையை
   சகலருக்கும் முழுமதி காலம் தன்னில்
5. தன்னிலே வரமாக வழங்கி
   தன் தவபலம் அனைத்தையும்
   அண்ணலாக உயர் தீட்சையாக
   அனைவருக்கும் வழங்கி அருள
6. அருள்பலம் ஞானபலம் தருமபலம்
   அனைத்தையும் இனைத்துநல்
   வரமென சக்தியாக ஏற்று
   வலம்வரும் அரங்கன் சீடர்கட்கு
7. சீடர்கட்கு ஞானவான் எனும்
   சித்திமிகு ஞானிகள் எனும்
   தடையிலா வரம் கிட்டியே
   தானவர்கள் உலகினில் சிறப்பர்
8. சிறப்பறிவு ஞானம் எனும்
   சித்திகள் பலவற்றையும்
   மறுப்பின்றி வழங்கி வரும்
   மாதவசி அரங்கன் அவதார
9. அவதார மகிமை உலகமறிந்து
   அனுகி பிரணவக் குடிலில்
   அவனியோர் சரணடைவு தந்து
   அபயமென வேண்டி வர

10. வருகவே சகல வகைதனிலும்
வளர்ச்சி மாற்றம் என
தருமபலம் தவபலமுமாகக் கூடி
தரணியே பெரும் பாதுகாப்புப் பெறும்

11. காப்புத்தரும் ஞானி நீயே
கலியிடர் வெல்லும் தவசி நீயே
ஒப்புக்கொண்டு உன் வழிவர
உலகமே மாற்றம் காண்கும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—